Dt.06.01.2017

## செய்தி குறிப்பு

மத்திய அரசின் "தூய்மை பாரதம்"திட்டதின்படி காரைக்கால் மாவட்டத்தை தூய்மை படுத்தும் முயற்சியாக காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகமும் இணைந்து 06.01.2017 முதல் 12.01.2017 வரை நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்க்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பொதுமக்கள் மற்றும் தான்னார்வளர்கள் கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்களைக் கொண்டும் மேலும் JCP இயந்திரம் மற்றும் வண்டிகளை கொண்டும் காலை 8.00 மணி முதல் 1.00 மணி வரை அனைத்து வீடுகள்,தெருக்கள்,சாக்கடைகள்,பொது இடங்கள் மற்றும் நீர் நிலைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் சீரியப்பணி இன்று காலை மேலாகாசாக்குடி ஜி.எம் திருமண மண்டபம் அருகில் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சந்திரப்பிரியங்கா தலைமையில் தொடங்கிவைக்கபட்டது.உடன் சார்பு ஆட்சியர் திரு.ஆர்.கேசவன் இ.ஆ.ப.மற்றும் உள்ளாட்சி துறை இணை இயக்குனர் திரு.மகாலிங்கம் மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இத்துப்புரவு நிகழ்ச்சி ஒரு வாரமும் நடைபெறும்.

6/1/17

Asst. P. R. O. to
COLLECTOR

07.01.2017

## செய்தி குறிப்பு

தூய்மையான காரைக்கால் மற்றும் பசுமையான காரைக்காலின் ஒரு பகுதியாக பூவம் அருகில் அமைந்துள்ள மாரியம்மன் கோவிலில் இருந்து முக்கிய சாலைகளில் சுத்தம் செய்யும் பணியை நெடுங்காடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சந்திரபிரியங்கா கொடி அசைத்து துவக்கி வைத்து துப்புரவு பணியில் ஈடுபட்டார்கள்.நிகழ்ச்சியில் பெருந்தலைவர் காமராஜர் அரசு பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு துப்புரவு பணியை மேற்கொண்டார்கள்.உடன் சார்பு ஆட்சியர் திரு.R.கேசவன் இ.ஆ.ப. மற்றும் உள்ளாட்சித்துறை இணை இயக்குனர் திரு. மகாலிங்கம் மற்றும் கொம்முயூன் பஞ்சாயத்து ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

7/1/17
Asst. P. R. O. to
COLLECTOR